DEPOSITION OF WITNESS Crl.Misc.39
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE SPECIAL COURT OF SESSIONS JUDGE, NAMAKKAL.

Special Court for SC/ST Cases, Namakkal.

Sessions Case No. 1/2017

Deposition of Witness for PW.8

| | |
|---|---|
| Name | : டாக்டர் திரு. பரணிதரன் |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 04.09.2019

முதல் விசாரணை -

நான் தற்போது கொல்லிமலை சோளக்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 07.03.2016 ம் தேதி பிற்பகல் 02.00 மணியளவில் நான் நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது வீரன் மகன் கண்ணையன் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் தன்னை தனக்கு தெரிந்த நபர் 05.03.2016 ம் தேதி காலை 06.30 மணியளவில் அடித்ததாக கூறினார். அவர் தனக்கு நெஞ்சு வலி இருப்பதாகவும், முகத்தில் வீக்கம் உள்ளதாகவும் கூறினார். அவர் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். அவருக்கு காணப்பட்ட வெளிப்புறக் காயங்களை சாதாரண வகையை சேர்ந்த காயங்கள் என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.4. காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

மறு விசாரணை - இல்லை.

DEPOSITION OF WITNESS Crl.Misc.39

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE SPECIAL COURT OF SESSIONS JUDGE, NAMAKKAL.

Special Court for SC/ST Cases, Namakkal.

Sessions Case No. 1/2017

Deposition of Witness for PW.9

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சண்முகவடிவேல் |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 04.09.2019

முதல் விசாரணை -

நான் பரமத்தி வேலூர் வட்டம், சேளூர் கிராமம், வடுகப்பாளையத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் விவசாயம் மற்றும் கரும்பாலை வைத்து தொழில் செய்து வருகின்றேன். கடந்த 05.03.2016 ம் தேதி காலை 07.00 மணியளவில் பிலிக்கல்பாளையத்தில் உள்ள காவியா பேக்கரியில் டி குடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தேன். அப்போது அந்த இடத்தில் கும்பலாக இருந்தது. நான் என்னவென்று விசாரித்தேன். மல்லிகாபுரம் காலனியைச் சேர்ந்த சாட்சி கண்ணையனும், வடுகப்பாளையத்தை சேர்ந்த ஆஜர் எதிரி ராமசாமியும் சண்டை போட்டுக்கொண்டதாக கூறினார்கள். இதே விவரத்தை தான் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் விசாரணையின்போதும் சொன்னேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

மறு விசாரணை - இல்லை.

DEPOSITION OF WITNESS Crl.Misc.39

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE SPECIAL COURT OF SESSIONS JUDGE, NAMAKKAL.

Special Court for SC/ST Cases, Namakkal.

Sessions Case No. 1/2017

Deposition of Witness for PW.10

| | | |
|---|---|---|
| Name | : | திரு. வீராசாமி |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 04.09.2019

முதல் விசாரணை -

நான் பரமத்தி வேலூர் வட்டம், பிலிக்கல்பாளையம், மல்லிகாபுரம் காலனியில் வசித்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன். 10.03.2016ம் தேதி காலை 10.00 மணியளவில் பிலிக்கல்பாளையம் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் உள்ள காவியா பேக்கரியில் டி குடிக்க நானும், செல்வக்குமார் என்பவரும் சென்றோம். அந்த இடத்தில் போலீசார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு ஒரு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.5. என்னை காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

நானும், சாட்சி கண்ணையனும் பங்காளி உடன்பிறப்பு ஆவோம். காலை 10.00 மணியளவில் சம்பவயிடத்தில் பொதுமக்கள் நிறைய பேர்கள் இருந்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல், சொன்ன இடத்தில், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் போலீசார் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லையென்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவைகளில் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சாட்சி கண்ணையன் என்பவர் எனக்கு பங்காளி உறவு என்பதால் அவரது வழக்கை ஆதரித்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.